# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2342/30 - 2023 ජූලි මස 27 වැනි බ්‍රහස්පතින්දා - 2023.07.27

*2342/30 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு யூலை மாதம் 27 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

*ச. வ. பீ. 94/47* (VIII)

**(269 ஆம் அத்தியாயமான) நாடு, நகரத் திட்டமிடல் கட்டளைச் சட்டம்**

*6 (2) (ஆ) மற்றும் 21 (2) (ஆ) என்னும் பிரிவுகளின் கீழான கட்டளை*

(269 ஆம் அத்தியாயமான) நாடு, நகரத் திட்டமிடல் கட்டளைச் சட்டத்தின் 6 (2) (ஆ) என்னும் பிரிவாலும் 21 (2) (ஆ) என்னும் பிரிவாலும் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக் கொண்டு, நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரான பிரசன்ன ரணதுங்க ஆகிய நான், இந்தக் கட்டளை மூலம்,

(1) இதற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட "மீகம்மன ரஜமகா விஹாரை" என அழைக்கப்படும் இடப்பிரதேசமானது மேற்சொல்லப்பட்ட கட்டளைச் சட்டத்தின் நோக்கத்துக்காக, நகர அபிவிருத்தி இடப்பரப்பொன்றாகவிருத்தல் வேண்டுமென வெளிப்படுத்துகின்றேன்; அத்துடன்

(2) நகர அபிவிருத்தி இடப்பரப்பொன்றாக மேலே வெளிப்படுத்தப்பட்டதான மீகம்மன ரஜமகா விஹாரைக்கு உருவரைப் பௌதீக திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டுமெனவும் பணிக்கின்றேன்.

**பிரசன்ன ரணதுங்க,**
நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு
அமைச்சர்.

கொழும்பு,
*2023, யூலை 21.*


1A - G 39975 — 11 (2023/07)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**அட்டவணை**

*மீகம்மன ரஜமகா விஹாரை புனித பிரதேச இடப்பரப்பினைக் கொண்ட பிரதேசம்*

*மத்திய மாகாணத்தில், கண்டி மாவட்டத்திலுள்ள பாததும்பர பிரதேச செயலாளர் பிரிவில் பல்லேகம்பஹ கோரளை சிறு பிரிவின், இலக்கம் 601, மீகம்மன கிராம அலுவலர் பிரிவினுள், மீகம்மன கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர் தலைமையதிபதியின் 2023, மே மாதம் 10 ஆந் திகதியைக் கொண்ட சுவட்டுத்திட்ட இல.* Maha/PTD/*2023/147 என்பதில் குறித்துக் காட்டப்பட்டுள்ளவாறாக காணித்துண்டு இல.* A *எனக் குறித்துக் காட்டப்பட்டுள்ளவாறான பரப்பளவில் 1.5579 ஹெக்டெயர் (3 ஏக்கர், 3 றூட், 15.94 பேர்ச்) விஸ்தீரணத்தைக் கொண்டுள்ளதுமான அக்காணியின் இடப்பரப்பு அடங்கலும் அதன் எல்லைகள் பின்வருமாறு:*

*காணித்துண்டு இலக்கம்* "A"

- *வடக்கு : (உரிமை கோருபவரை கண்டுபிடிக்க முடியாத) கிரவனாகெட்டிய வத்த, கால்வாய் மற்றும் கே. ஜி. திலங்கா குமாரி என்பவரால் உரிமை கோரும் பன்சலதென்ன வத்த ;*
- *கிழக்கு : கே. ஜி. சமீர கயான் என்பவரால் உரிமை கோரும் பன்சல்தென்ன வத்த மற்றும் பிரதேச சபை வீதி;*
- *தெற்கு : எச். எம். ஆர். பண்டார என்பவரால் உரிமை கோரும் கப்பல்கொட வத்த, காணித்துண்டு இலக்கம்* B, *வீதி மற்றும் காணித்துண்டு இலக்கம்* C;
- *மேற்கு : காணித்துண்டு இலக்கம்* C, *(உரிமை கோருபவரை கண்டுபிடிக்க முடியாத) கிரவனாகெட்டிய வத்த மற்றும் அநுருத்த முல்லேகம என்பவரால் உரிமை கோரும் கிரவனாகெட்டிய வத்த.*

EOG *07 - 0251*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*